பதிவு எண். எம். 8123. தமிழியக்க நாளிதழ் விலை காசு 6

முன் பக்கத் தலைப்பு
விளம்பரம்
அன்றாடக் கட்டணம் :
(ஒரு தடவைக்கு) 15—00
நீடித்த ஒப்பந்தம் :
26 முறையும் அதற்கு
மேலும் )
ஒரு தடவைக்கு : 12—00

# குறள் நெறி

தமிழ் வாழ்க
ஆசிரியர்: சி.இலக்குவனார் எம்.ஏ.,எம்.ஓ.எல்.,பிஎச்.டி

மலர் 1 | மதுரை கார்த்திகை ௰ (25-11-66) வெளியீடு கார்த்திகை ௧௧ (26-11-66) | இதழ் 157

# உரிமை நாட்டில் உரிமைக்குப் போரா?

## காங்கிரசு உறுதியாக வீழ்த்தப்படும் நம்பூதிரிபாடு முழக்கம்!

மூணாறு நவ 23.
20—11—66 அன்று டி. எம். நாயர் திடலில் பொது உடைமைக் கட்சி பொதுக்கூட்டம் திரு காக்கையன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் பொது உடைமைக்கட்சி வீதல் அமைச்சர் திரு இ. எம்.எஃச். நம்பூதிரிப்பாடு அவர்கள் பேசியதாவது கேரள மாநிலத்தில் மக்களாட்சி மலர சனநாயகம் தழைக்க விலை உயர்வைத் தடுக்க மக்களை மக்ளாக மதிக்கப்பட வேண்டுமானல் காங்கிரசு வீழ்த்தப்பட வேண்டும் என்ற முடிவுக்கு கேரள மக்கள் வந்து விட்டார்கள், என்ற உண்மையை காங்கிரசு புரிந்துகொண்டு தான் இல்லாத பொய்களையும் சொல்லி மக்கள் மனதை மாற்றி தேர்தலில் பணத்தை செலவு செய்தாவது வெற்றி பெற்று விடலாம் என்ற கனவு கண்டு வருகிறார்கள். ஆனால் பொதுத் தேர்தலில் அவர்கள் எத்தனை வித்தைகள் காட்டினாலும் கூட்டுமுன்னணி தான்வெற்றிபெறும்அமைச்சரவை அமைக்கும் இது உறுதி எந்த அளவுக்கு காங்கிரசை வீழ்த்தவேண்டும் என்பதை கேரள மக்கள் புரிந்துகொண்டார்கள் என்பது பற்றியும் விலைவாசி உயர்வு பற்றியும் விளக்கம் தந்தார். அதன் பின் திரு மணி பாரதி அவர்களும் திரு. வரதன் அவர்களும் பேசினார்கள்.

—

## நம்பிக்கையிலாத் தீர்மானம் தோல்வி

புது தில்லி நவ 23
இன்று தில்லிப் பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களால் கொண்டு வரப் பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் அவைத்தலைவரால் ஒப்புதல் மறுக்கப்பட்டது. குறைந்தது 50 பேர்கள் கொண்டுவர வேண்டிய இத் தீர்மானம். 22 பேரால் கொண்டுவரப் பட்ட தலைல் தான் ஒப்புதல் தர அவைத் தலைவர் இசையவில்லை எனத் தெரிகிறது.

## "மின்" துணைக் கருவிப் பெருக்கம்

புதுதில்லி நவ 23
தமிழகத்தில் இருக்கும் மின் நிலையங்களுக்கு தேவைப் படும் துணைக் கருவிகள், பொறிகள் முதலியனவற்றை தமிழகத்திலேயே உருவாகித் தன்னிறைவு செய்து கொள்வதற்கான ஆக்கப் பணிகள் மிக விரைந்து நடைபெறுகின்றன 'என்ற போதும் சில நுண் கருவிகளை மேலை நாடுகளில் இருந்துவர வழைத்து தீரவேண்டி நிலை யுள்ளது என்று கூறப்படுகிறது.' இதற்கான ஒரு குழு அமைக்கப் படடுள்ளது. இப்பொருட் பெருக்கத்திற்கான நிறுவனம் 1972 இல் இயங்கத் தொடங்கும் எனத்தெரிய வருகிறது.

## -செ. மாதவன்

**காப்பீட்டுக் கழகத்தில் மின்னணு இயந்திரம் அமைத்து ஆட்குறைப்புத் திட்டத்தை நிறைவு செய்யும் போக்கை எதிர்த்து அனைத்துக்கட்சியினரும், பேராசிரியர் இலக்குவனார் அவர்களும் பேசினார்கள்.**

மதுரை; நவ, 23—
ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் மின்னணு இயந்திரப்புகுத்தல் திட்டத்தினை எதிர்க்கும் வகையில் 25-ம் நாள் வேலை நிறுத்தம் செய்வதை முன்னிட்டு வேலை நிறுத்தத்திற்கான காரணங்களை விளக்கும் வகையில் காப்பீட்டுக்கழக ஊழியர்கள் இன்று ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடத்தினர். ஊர்வலம் வடக்குச்சித்திரை வீதிக்காப்பீட்டுக் கழகத்தில்ஆரம்பித்து நான்கு மாசி வீதிகள் வழியாக திலகர் திடலை அடைந்தது. ஊர்வலத்தில் 1000பேர்களுக்கு மேற்பட்ட காப்பீட்டுக்கழக ஊழியர்கள், அஞ்சல்துறையினர், தொடர் வண்டித் துறையினர், மாணவர்களும் கலந்து கொண்டனர்.

பின்னர் நடந்த பொதுக் கூட்டத்திற்கு காப்பீட்டுக் கழக தலைவர் திரு. இராகவன் தலைமைவகித்தார். செயலர் ஆர். கிருட்டிணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

கோவை இடதுசாரிபொதுவுடைமைத் தலைவர் இரமணி பேசுகையில், காப்பீட்டுக் கழக ஊழியர்களின் உதவியால் கிடைத்த பணங்களை அரசாங்கம் பல் வேறு துறைகளில் முதலீடு செய்து விட்டு இன்று வீடுஎரிந்தவுடன் சாம்பலைத் தள்ளு

(2-ம்பக்கம் பார்க்க)

# இரவு 12 மணிவரை தேர்தல் கூட்டங்கள் நடத்தலாம்

## திரு. அருள் அறிவிப்பு

கோவை நவ;- 23
தமிழ் நாடு காவல் துறை பொறுப்பாளர் திரு. அருள் இன்று விமானம் மூலம் இங்கு வந்து சேர்ந்தார். கூட்டு தேர்தல் அலுவலர் திரு. தேவசகாயம் உட்பட பல அலுவலர் அவரை வரவேற்றனர்.

பின்னர் மாவட்டத் தலைமைக் காவல் துறை அலுவலகத்தில் காவல் துறை அலுவலகக்கூட்டம்நடைபெற்றது. கூட்டத்தில் தேர்தல் காலம் பற்றி முடிவுகள் எடுக்கப் பட்டன.

இவை:- 1. கட்சி அரசியல் கொள்கைகளைத் தாக்கிப் பேசுதவல்லாமல் தனிப்பட்டவரைத் தாக்குதல் கூடாது;

2. சாதி, மதம் ஆசியவற்றின் பெயரால் ஓட் வாக்குகளைப் பெற முயலக் கூடாது.

3. வழிபாட்டு ஆலயங்களிலும், குடிப்பிட்ட சில நகர்ப் பகுதிகளிலும் - முறையே கொள்கை பரப்புதலும் கூட்டமும், நடத்தக் கூடாது.

4. தேர்தல் சமயத்தில் ஊர்க் காவல் படையினரும், காவலுலருக்குத் துணையாகப் பணிபுரிவர்.

5. சனவரி முதல் நாள் இரவு 12 வரை கூட்டம் நடத்த ஒப்புதல் கிடைக்கும். தேர்தல் காலங்களில் எந்த வித ஆர்ப்பாட்டங்களும் நடைபெறாமல் இருக்க காவல் துறை பரவலாகப் பணியாற்றும் என்றும் திரு. அருள் கூறினார்.

—

## "குறள்நெறி" நாளிதழ் உதவி நிதி

**நன்கொடை யளித்தோர் பட்டியல்:**

பாசுகரன்—மஞ்சுளா திருமண நன்கொடை உரு. 5-00

நன்கொடை அளித்தோருக்கு நன்றி. அன்பர்கள் அவரவர்களால் இயன்றவாறு உதவி அளிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். —ஆசிரியர்

## பட்டறிவின் சின்னம்!

புதுதில்லி நவ. 23—
கடந்த ஏழு நாட்களாக இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்த செகோசுலேவியக் குடியரசுத் தலைவரும் அவரது துணைவியாரும் இன்று புதுதில்லியிலிருந்து தாயகத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

பாலம் விமான தளத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. இராதகிருட்டிணன் துணைத் தலைவர் சாகிர்உசேன் மற்றும் கூட்டரசின் உயர் அலுவலர் பலரும் வந்திருந்து சிறப்பாக வாழ்த்தியனுப்பினர். குடியரசுத் தலைவர் பிரிவுச் செய்தி வெளியிட்ட போது "இராஞ்சியை திரு நோவோட்னி அவர்கள் காண இயலவில்லை என்றும் கால நிலையும் வானிலையும் ஒத்து வராததனால்இராஞ்சிக்குப் போக இயலவில்லை. இராஞ்சிக் சென்றிருந்தால் செக்நாட்டு உதவியுடன் அங்கு நடத்தப் பெறும் தொழில் நிலையங்களைக்கண்டுதிருநோவோட்னி மிகமிக உற்சாகம் மேலிட்டவராய் காணப்பட்டிருப்பாரென்றும் —இராஞ்சியைக் காணும் வாய்ப்பு அவருக்குக் கிட்டாதது குறித்து தாம் வருந்துவதாகவும் இருப்பினும், இரு நாடுகளின் உறவும் மேலும் வலுப்படுவது உறுதி என்றும் சொன்னார்.

இறுதியாகப் பேசிய திரு நோவோட்னி அவர்கள் தனது பயணம் பட்டறிவின் சின்னமாகத் திகழுமென்றும்-மனித குல மாண்புகள்வளரத்தான் தாம் அரும் பணியாற்றுவதாகவும் உலகம் ஒன்றுபடும் படியான பணிகளை இரு நாட்டினரும் முன்னின்று ஆற்றுதல் வேண்டுமென்றும் கூறி ... றுக் கொண்டார்.

குறள் நெறி
தமிழ்வாழ்க
தி. வ. ஆண்டு ககூ௯௭ கார்த்திகை ௰ வெள்ளி
முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். — குறள் ௬௭௬.

# காப்பீட்டுக் கழக ஊழியர்களின் கவலை போக்குக

காப்பீட்டுக் கழகம் (L. I. C.) மற்றவர்களின் கவலையைப் போக்கத் தோன்றியது. அது தனது ஊழியர்களையே கவலையில் ஆழ்த்தும் நிலைக்கு ஆளாகியுள்ளது. ஊழியர்கள் ஆற்றும் பணியை உணர்விலா இயந்திரங்கள் ஆற்றப் போகின்றனவாம். இம்முறையால் 40000 பணியாளர்களில் 30000 பேர் வேலையை இழக்கவேண்டி வருவார். ஆகவே வேலையை இழந்தால் என் செய்வது என்ற ஏக்கம் இன்று அவர்களை வருத்துகின்றது. மக்களின் உதவிக்குத்தான் இயந்திரங்கள் பயன்படவேண்டுமேயன்றி மக்களைத் துன்பத்துக்கு ஆளாக்கப் பயன்படுதல் கூடாது.

வளப்ப மிகுந்த நாட்டில் வேலை நேரத்தைக் குறைத்து ஓய்வை மிகுதிப்படுத்த வேண்டியதுதான். அதற்கு இயந்திரங்கள் துணைவேண்டப்படலாம். ஆனால் கவலைக் கடலில் ஆழ்ந்த இயந்திரங்களின் துணையை நாடுதல் நன்றன்று.

காந்தியடிகள் கதர்த் திட்டத்தைக்கொண்டுவந்தது நூற்பு, ஆடை நெய்தல் துறைகளில் இயந்திரங்கள் தலைமை தாங்கியுள்ளமையை அகற்றி மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதற்கேயாகும். காந்தியடிகள் வழியில் செல்வதாகக் கூறிக்கொள்ளும்காங்கிரசஆட்சி இயந்திரங்களைப் புகுத்தி மக்களை வேலைவாய்ப்பிழக்கச் செய்வது காந்தியடிகள் நெறிக்கு மாறுபட்டதாகும் செயலன்றோ? காந்தியடிகளின் நெறியை நிறுவுவதன் மூலம் காந்தியடிகட்குத் தம் நன்றியை அறிவித்துக் கொள்ளுகின்றனர்போலும் இயந்திர முறையைப் புகுத்துதலை நிறுத்தி ஊழியர்களின் அச்சத்தையும் கவலையையும் போக்க வேண்டும்.

அவர்கட்குத் தகுந்த வாக்குறுதிகொடுக்காததனால் 25—11—66-இல் அடையாள வேலை நிறுத்தத்தின் வழியாகத் தம் எதிர்ப்பை அறிவிக்கத் திட்டமிட்டுள்ளனர். இந்த ஆட்சியில் வேலை நிறுத்தமும் கிளர்ச்சியும் செய்தாலின்றி எதனையும் பெற முடியாது என்ற நிலை ஏற்பட்டிருப்பது மிகமிக வருந்தத்தக்கது.

அன்றியும் நிலையான அமைதியுடன் ஊழியர்கள் பணிபுரிய வேண்டுமானால் ஊழியர்கள் செய்ய வேண்டியன இரண்டு உள.

**ஒன்று:** காந்தி நெறிக்குமாறாக, மக்கள் ஆட்சி முறை தவறி, ஆண்டுவரும் காங்கிரசுக் கட்சியைப்பதவியிலிருந்து அகற்ற வேண்டும்.

**இரண்டு:** மிகுதியான வேலைகள் குவிந்துள்ள இடத்தில்தான் இயந்திரங்கள் புக இயலும். இப்பொழுது இந்தியா முழுவதும் உள்ள-பல மாநிலங்களின் பொறுப்புக்களை ஒரே இடத்தில் சேர்த்து வைத்துள்ளனர். இவற்றைப் பிரித்து அந்தந்த மாநிலத்தின் நகரங்களில் அமையச் செய்தால் வேலை மிகுதி குறையும். இயந்திரங்களைப் புகுத்தல் இயலாது. ஆகவே அதற்கு வசதியாகத் தமிழகப் பிரிவு ஏற்பட்டுக் குவிந்துள்ள பணிகளைப் பரவலாக்க வேண்டும்.

இவை இரண்டும் நிறைவேறினால்தான் காப்பீட்டுக் கழக ஊழியர்கள் என்றும் கவலையற்று வாழ இயலும்.

## மதுரை நகரவை பரிசளிப்பு விழாவில் கக்கன்

மதுரை நகரவை நூற்றாண்டு விழாவில் நடந்தவிளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்கட்கு அமைச்சர் கக்கன் பரிசு வழங்கினர். மாறுவேடப் போட்டியில் முதல், இரண்டாவது, மூன்றாவதுப் பரிசுகள் உடல்நலத்துறை உதவியாளர் திரு. சுப்பிரமணியம், நகரவை உறுப்பினர்கள் திரு. கிருட்டினமூர்த்தி, எசு. கருப்பையா பெற்றனர். தொடர்ந்து நகரவையில் உறுப்பினராகப் பணியாற்றிவரும் திரு. சீராவுக்குப் பரிசளிக்கப்பட்டது. அதிகமானநகரவைக் கூட்டங்களில் கலந்துகொண்ட கே. எச். சந்தானம், தலைவர் ராமகிருட்டிணன், பி. கி. குமாரத்தாண்டன் ஆகியவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது. நூற்றுண்டு விழாவையொட்டிச் சுத்தமாக வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டிச்சாலைகளுக்கும், முடிதிருத்தும் நிலையங்களுக்கும், நன்கு அலங்கரிக்கப்பட்ட நகரவைக் கட்டடங்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இம்மாதம் 1-ந்தேதி பிறந்த 36 குழந்தைகளுக்கு நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 14 காரட் தங்கப்பதக்கம் பரிசளிக்கப்பட்டது. பரிசளிப்பு விழாவிற்குப் பின்னர் பள்ளிக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சியும், நகரவை உறுப்பினர்கள் நடித்த நாடகமும் நடைபெற்றது. விழா சிறக்க முறையில் நடைபெற நகரவை ஆணையாளர் திரு. கே. நு. நம்பியார் சிறப்பான ஏற்பாடுகள் செய்திருந்தது பாராட்டத்தக்கது.

## தேவை

குறள்நெறி நாளிதழ் விற்பனை செய்ய எல்லா ஊர்களுக்கும் விற்பனையாளர்கள் தேவை.

இப்படிக்கு
செயலர்,
குறள்நெறி.

## தி மு. க. கூட்டம்!

சிவகாசி, நவ. 23—
19—11—66 சனிக்கிழமை யன்று 'சல்வார்பட்டி' (சிவகாசித் தொகுதி) கிராமத்தில் தி. மு. கழகத்தொடக்கவிழா நடைபெற்றது. மாலை 5-30 மணிக்கு திரு. வே. கருணாகரன் அவர்கள் கழக இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்தார்கள். பின்னர் இரவு 7மணிக்கு அப் பொதுத் திடலில் தோழர் மாரியப்பன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சாத்தூர் வட்டச் செயலர் எசு. பி. மணி, வே. கருணாகரன் டி. கப் பிரமணியம், டி. கே. இராசு, துரைராசு, இராமமூர்த்தி, ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கியும் 67 பொதுத் தேர்தலில் காங்கிரசு ஆட்சியிலிருந்து இறக்கப்படவேண்டியதன் தேவை குறித்தும் விரிவாகப் பேசினர். இறுதியில் சாத்தூர் வட்டச் செயலர் எசு. பி. மணிராம் எழுதிய திருநாவுக்கரசு, எசு. கனிகுரு வினர் நடிக்கும் 'கல்லறை' என்ற புதிய நாடகமும், 'இதுதான் காங்கிரசு'என்ற நகைச்சுவை நாடகமும் சிறப்பாக நடைபெற்றது. தலைவர் நன்றி கூறினர்.

கூட்டத்தில் சல்வார்பட்டி பூச்சக்காபட்டி, வெற்றிலைப் பட்டி, ஆகிய ஊர்களில் உடனடியாக நியாயவிலைக் கடைகள் வைத்து அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருட்களை விரைவில்வழங்க வேண்டுமென்று அரசினரை கேட்டுக் கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## உரிமைநாட்டில்...

[1ஆம்-பக்கத் தொடர்ச்சி]

வரைப்போல் படித்த ஊழியர்களின் நேர்மையான போராட்டத்திற்கு இடதுசாரி பொதுவுடைமைக் கட்சியின் உறுதியான ஒன்றும் உண்டு என்று கூறினர்.

ராமசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். (சுதந்திரா) பேசுகையில், இன்றைய ஆட்சியில் அரசாங்க அலுவலர்கள் அனைவரும் போராட்டம் நடத்த வேண்டிய நிலை தோன்றியுள்ளது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் மின்னணுக் கருவிப் புகுத்தலால்40,000 பேர் வேலை செய்யுமிடத்தில் 30,000ம் பேரை நீக்கவேண்டியநிலை ஏற்படுகிறது; நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டம் பெருகி வரும் வேளையில் 30,000 பேர்களை வேலையிலிருந்து நீக்கும் மின்னணுக்கருவி தேவைதானா? காப்பீட்டுக் கழக ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கு சுதந்திரா கட்சி ஒத்துழைப்புத்தரும்அதோடுபொது மக்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கூறினர்.

பேராசிரியர் டாக்டர் இலக்குவனர் பேசுகையில்,

இன்று நடைபெறும் போராட்டம் கருவிகளுக்கும், மனிதனுக்குமிடையே நடைபெறும் போராட்டம். மேல் நாட்டில் கருவியைப்புகுத்தி ஊழியர்களின் வேலை நேரத்தினைக்குறைக்கிறார்கள். இங்கு ஊழியர்களையே குறைக்கிறார்கள் கருவிகளிலிருந்தும் கைராட்டினத்திலேயே நூல் நூற்கிறார். காந்தி வழி வந்த காங்கிரசு ஆட்சியோ இயந்திரத்தைப் புகுத்துகிறது. அமெரிக்காவில் காப்பீட்டுக் கழகத்தில் 7½கோடியே 80 ஆயிரம் பேர் வேலை செய்கின்றனர். அங்கு வேலை நீக்கம் கிடையாது. மாநில வாரியாக ஆயுள் காப்பீட்டுக் கழகத்தைப் பிரித்தால் சிக்கல் தீரும். இதற்குத்தமிழக ஆட்சி தனியாகவேண்டும். காப்பீட்டு கழக ஊழியர்கள் ஆட்சி உரிமை, மக்கள் உரிமை ஆகியவற்றிற்குப்பாடுபட வேண்டும் நிரந்தரமான, என்றும் உள்ள நல்லவாழ்க்கையை விளங்க திறமை அறுநவர்கள் [மூன்று] ஆட்சி அகற்றப்படவேண்டும். அல்லது:மிழக ஆட்சிதனியாகப்பிரிய வேண்டுமென்று கூறினர்.

## 'கவர்ச்சிச் சொற்களின் வாய்ப்பந்தல் காங்கிரசுக் கட்சியின் தேர்தல் அறிக்கை'

### தி. மு கழகத் தோழர் ச. அழகன் இடித்துரை

திருச்சி நவ. 23-
முப்பதாவது வட்டம் கலைஞர் கருணாநிதி படிப்பகத்தின் சார்பில் நடைபெற்ற மாபெரும் கழகப் பொதுக் கூட்டத்தில் திருச்சி நகர் தி.மு.க. செயலர் நடராசன் பொருளாளர் மலர்மன்னன் அந்தோனிசாமி, பெருமாள் ஆகியோர் பேசியவுடன் திருவில்லிபுத்தூர் ச. அழகன் நீண்டநேரம் உரையாற்றினர்.

"கொடுங் கோன்மையின் வேடர்தாங்கி உலகினைக் கட்டியாள நினைத்தவர்களின் துயர வரலாறுகள் இன்றைக்கும் நம் கண்களுக்கு முன்னர் நிற்கத்தான் செய்கின்றன. கல்லவர்களின் வரலாற்றுச் சுவடிகளுக்குப் பக்கத்தில் அவர்களின் சரிதைகளும் இருக்கத்தான் செய்கின்றன. உலகினுக்கு ஓர் துன்பக் குறியாகத் தெரிந்த பட்ட செர்மானியத்து இட்லர் ஒரு கொடுங்கோலர் என்று உலகின் பார்வைக்கு அறிமுகப்படுத்தப்பட்டான் ஒரு கயவன் என்று காட்டப்பட்டான். அவனை புதுமையுலகத்தின் எதிரி என்று படம் பிடித்துக் காட்டினர். ஆனால் அந்த இட்லர் தன்செர்மானிய இனம் வாழ செர்மானிய மொழி வாழ உலகத்தின்காடுகளைத்தும் செர்மானியனின் காலடியில் மண்டியிட்டுக் கிடக்கவேண்டும் எனக் கனவு கண்டான். தன் இனத்திற்கு தன் மொழிக்கு தன் தாய் நாட்டிற்கு அவன் கடுகளவும் தீங்கு நினைத்ததில்லை; தீங்கு விளைத்ததில்லை.

ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் புதுமெருகோடு சில கொடுங்கோலர்கள் உலகிற்கு அறிமுகமாகியுள்ளனர். திருவாளர் காமராசரை சிலர் இட்லருடன் ஒப்பிட்டார்கள். காமராசர் தன் தமிழினம் வாழ தன் தாய்மொழி தழைக்க தன் தாய்த் தமிழின் வரலாற்றுச் சுவடி மாண்ட பெருமையினை மீண்டும் பெற எந்த எந்த வழியும் செய்தவரல்லா வடபுலத்து இந்தியின் ஆதிக்கப் படிக்கட்டுக்களில் தண்டனிட்டு பதவிப் பித்த மேறி தலைவிரித்தாடுகிறார். தாய்மொழியைக் காட்டிக் கொடுக்கும் கைலாகு வேலை பார்க்கிறார். செர்மானியத்து இட்லர் எவ்வளவோ நல்லவன். அவன் காமராசரைப் போல் தன் மொழியை அடகு வைத்தவனல்லன் தன் இனத்தை மறந்து வேற்றிடத்துப் பெருமைக்காகப் பராக்குக் கூறியவனல்லன். அவனது சரித்திரமானது உலகப் பேரேட்டில் குறிக்கப்பட்டு விட்டது ஆனும் காமராசரின் பெயர் கடைச் சரக்கு மடிப்பதற்காகப் பயன்படும் காகிதக் குப்பைக்குச் சென்றுவிடும் என்பது திடமான உறுதி.

இந்தியத்துணைக் கண்டத்தை பெய்பிடித்தாட்டுகிறது என்று புராணிகர்கள் வர்ணிக்கிறார்கள். துணைக்கண்டத்துக்கு என்ன ஆகுமோ என்று அரசியல் வட்டாரத்தினர் கவலை கொண்டிருக்கிறார்கள். வறுமையின் கோரக்களியாட்டம் என்ன முடிவுக்கு இழுத்துச் செல்லுமோ என்று வாட்டம் கொண்டிருக்கிறான் பாட்டாளித் தோழன். பசித்திருக்கும் வயிற்றிற்குப் பசியாற உணவளிக்க முடியாத ஆளுவோர்கள்ஏழையின் விழிகளுக்குமுன்னால்தச்சர வார்த்தைகளைப் படைத்திருக்கிறார்கள். 'சோசலிச'க் கொள்கையை மிக நேர்த்தியாக அலங்கரித்து வீதிதோறும், ஊர்தோறும் நாடுதோறும் பவனி வரத் தொடங்கியிருக்கிறார்கள் காங்கிரசார். ஆட்சி பீடமேறிவிட்ட தலைக்கனம் அவர்களைக் கோயில்திருவிழாவின் சாமியாட்டம் கோலத்திற்கு இழுத்துச் சென்றிருக்கிறது.

சேர மாநிலத்து எர்ணாகுளத்தில் நடைபெற்ற காங்கிரசுக் கட்சியின் மாநாட்டில் காங்கிரசு படைத்திருக்கும் தேர்தல் அறிக்கையைப் பற்றிக் காரசாரமாக வாவாதித்திருக்கிறார்கள். பண்டிதவிசுவநாதசர்மையார் காங்கிரசின் தேர்தல் அறிக்கைகளைக் குதலாத கற்பனை வாதங்களைக் கொண்டிருக்கிறது எனச் சாடியிருக்கிறார். படேல்என்பவர் அது பாசாங்குச்சேலையை முடிக் கொண்டிருக்கிறது என்று வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

இருந்தாலும் காமராசரைத் தேரிலேற்றிக்கொண்டு, வர்மராயச் சோசலிசப்பாட்டுக்களுடன் கவர்ச்சிகரமான சொற்களின் ஆர்ப்பாட்ட வடைகளுடன் வாயப்பந்தல் போட்டு விழாக் கொண்டாட வருகிறார்கள் ஆட்சிக்கட்சினர். ஏமாற்றுபவர்கள் எக்காலமிட்டாலும் ஏமாறக் கூடியவர்கள் விழித்துக் கொள்ள வேண்டிய வேளை நெருங்கிவிட்டது. தேர்தல் களத்தின் முடிவு காங்கிரசின் ஒய்யாரப் பவனிக்குத் தடைக்கல் போட்டும்"

என்று தனது உருக்கமான உரையில்தோழர் ச. அழகன் குறிப்பிட்டார்.

※

## ஆலைகள் கதவடைப்பு நிறுத்தப்படும்

### அமைச்சர் அறிவிப்பு!

புதுதில்லி, நவ. 23—
தமிழகத்தில் 16 ஆலை உரிமையாளர்கள்பஞ்சுப்பற்றாக்குறை காரணம் காட்டி ஆலைகளை மூடிவிடத்திட்டமிட்டுள்ள செய்தி குறித்து இன்றுபாராளுமன்றத்தில் தொழிலாளர் துறை அமைச்சர் திரு. மாலுபாய்சா குறிப்பிடுகையில் தொடர்ந்து 15 நாட்களுக்கு ஆலைகளை உரிமையாளர் முடிவிட இயலாது' அவர்களுக்கு சட்டம் இடந்தராது என்றும், தொழிலாளர் தலைவர்கள்.ஆலை உரிமையாளர்கள் கழகத்தின் பொறுப்புள்ள உறுப்பினர்கள் ஆகியோருடன் தனித்தனியே கூட்டாசிரியர் பேச முடிவு செய்திருக்கிறார்கள். தொழிலாளர் தலைவர்களுடன் வரும் புதன்கிழமையன்றும் ஆலை உரிமையாளர் கழகத்துடன் வியாழனன்றும் பேச்சுக்கள் நடத்தப்பெறும். அதன் பின்னர்தான் அரசு ஒரு முடிவுக்கு வர இயலும் என்ற அவர், உறுதியாக கதவடைப்பு நிறுத்தப் பெறும் என நம்பிக்கை தெரிவித்தார்.

## அறிவிப்பு

நாளிதழ் வெளிவருவதனால் திங்களிருமுறை வெளிவரும் இதழை நாளிதழுடன் இணைத்து வார மலராக வெளியிடுகின்றோம். ஆதலின் திங்களிருமுறை இதழ் உறுப்பினர்கட்கு நாளிதழ் வாரமலர் இனி அனுப்பபடும்.

நாளிதழ்க்கு உலிப்பினராகும்படி அன்போடு வேண்டிக் கொள்கின்றோம். நாளிதழ்க்கு உறுப்பினராகி நற்றமிழ்த் தொண்டுக்கு உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

— ஆசிரியர்.

அடுத்துப் பேசிய சென்னை சட்டமன்ற உறுப்பினர் திரு. ச. மாதவன் பேசுகையில், காப்பீட்டுக்கழக ஊழியர்களின் சிக்கல்கள் ஆட்சியாளருக்குப்புரியவில்லை, புரியக்கூடிய திறனுமில்லை. இதற்குக் காரணம் அரசினரின் தன்னலம்தான், இன்று உரிமை நாட்டிலே உரிமை கேட்டுப் போராடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் செய்யும் வேலையை, கருவி செய்வதால் மக்களுக்கு உண்டாகக்கூடிய நன்மை என்ன? வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவருவதை ஒப்புக் கொள்ளும் அரசினர் மின்பொறியைநுழைத்து ஊழியர்களைவேலை நீக்கம் செய்கின்றனர். இதனை மக்களுடையபிரதிநிதிகள் சட்டமன்றத்தில் எடுத்துக்கூறியும் பயன் இல்லை. ஆகவே இந்த ஆட்சியை அகற்ற வேண்டும். காப்பீட்டுக்கழக ஊழியர்களுக்கு தி.மு. க.ஆதரவுநல்கும். அனைத்துக்கட்சிகளும், பொது மக்களும் ஆதரவுதரும்படி கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் கலந்துகொண்டு எம். இரத்தினம் வ. பொ. மாணவர்தலைவர் காசம் ஆகியோர் பேசினர்.



## அன்பர் அஞ்சல்

### தமிழரின் அணிகலன் 'குறள்நெறி'!

அன்பிற் சிறந்ீர்,
"குறள்நெறி" நாளிதழ் கண்டேன்; களிமிக கொண்டேன். செந்தமிழ் பரவும் தீந்தமிழ் ஏடு இதுபோல இப்பாரினில் வேறெதுவும் காணேன்.
தமிழ்த்தமிழில் அழகுபட செய்திகள் வெளிவருகின்றன சொக்கியின் அரசியலில் நமது நெஞ்சோட்டம் என்ற பகுதி என்மனதினை பெரிதும் கவர்ந்துள்ளது. செய்திகளை நிறைய வெளியிட்டு. இதழை பெரிதாக்க கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,
எசு. ஏ. ஆர். அங்குராசு,
செயப்பிரஇரத்தின புகைப்படநிலையம்,
திருவில்லிபுத்தூர்.

## அரசியலில் நமது நெஞ்சோட்டம்

'சொக்கி'

**காமராசருக்குப் பட்டடலின் மறுப்பு..........**

ஆனால் நாட்டுப் பொறுப்புக்கு நாங்கள்தான் நிலையான வாரிசுகள் என்று கூறிக்கொள்ளும் காங்கிரசுக் கட்சியின் உச்சியே, சாதாரண ஒரு தொகுதிப் பிரிவுக்காக இரண்டுபடுகிறது என்கையில்தான், நாட்டுப் பொறுப்புக்கு காங்கிரசுக்கட்சி தாங்கிவந்த தகுதி கரைந்துவிட்டது என்ற உண்மை மக்களுக்குப் புலப்படுகிறது. மேலாண்மை செலுத்தும் வலிமை வாய்ந்த தலைமை இல்லாத குறையால் காங்கிரசுக் கட்சி துன்பப்படுவதும் வெளிப்படையாகிறது. நாடாளும் மேலிடமே ஒரேயொரு தொகுதிக்காக இப்படி தொலைதட்டிக் கொள்வதைப் பார்க்கும்போது தான் பெரியார் பசும்பொன் தேவரவர்கள் கூறிய மாணிக்க மொழி நினைவுக்கு வருகிறது.

மங்கை சூதகமானால் கங்கையில்
மூழ்குவாள்—கங்கையே
சூதகமானால் எங்குபோய்
மூழ்குவாள்'

இருண்ட எதிர்காலம் காங்கிரசுக்காகக் காத்திருக்கிறது என்பதன் முன்னறிவிப்பதா-, மேலிடத்தின் உச்சியிலேயே ஏற்பட்டுள்ள வெடிப்பு! காங்கிரசுக் கட்சி வெடிக்கட்டும் வேகட்டும். ஆனால் நாடு கெடும் அளவுக்கு காங்கிரசின் உச்சிப்பிளவு போய் விடாமற் காப்பது எதிர்க்கட்சிகளின் கடமை.

## 'அழல்' டப்பாவும் அரசினர் அங்காடியும்

மக்களுக்கு மலிவு விலையில் நல்ல பண்டங்களை விற்பனை செய்ய என்ற விளம்பரத்தோடு நமது கருணை மிக்க காங்கிரசு அரசாங்கம், சிறப்பு அங்காடிகளை திறந்து கொண்டு வருகிறது — வரவேற்க வேண்டியது தான்.

நாடாள்வதற்காக மக்கள் வாக்கிட்டனுப்பிய அரசு, மளிகைக் கடையும், காய்கனிக் கடையும், வைக்கத் தொடங்கி இருப்பது வெறும் விளம்பரத் தரத்துக்குப் பொருத்தம் தான் ஆனல் அரசாங்கமே மாற வேண்டிய கட்டாயத்திற்கு வந்து விட்ட நிலை, இதர தனிப்பட்டோர் வணிக நிலையங்களெல்லாம் மோசடிக் கொட்டமாகி விட்டனவா? என்ற கேள்வியை எழுப்பி விட்டிருக்கிறது. அரசாங்கமே அங்காடி நடத்தப் புறப்பட்டு விட்டது என்பது நாட்டின் பரம்பரைப் பண்புக்கு, பாங்குக்கு, பற்கோவலம்.ஆனல் நாட்டாள்வோருக்கு நாடு, அதன் பண்பு, பாங்கு, பரம்பரை, என்பவைகளைப் போல் பேண வேண்டிய கடமைகளை விட, அவர்களின் கட்சியைக் காத்துக் கொண்டால் போதும் என்ற முடிவு! ஆகவே தமது கட்சிக்கு மட்டும் உரமிடும் செயல்களாகப் பார்த்தே செய்கிறார்கள்.

ஆனல் கட்சி நலன், நாட்டின் நலனிலிருந்துதான் ஆரம்பமாக வேண்டும் என்பதை, தேர்தலினவில் உணர்வு மாறித் திரிகிறவர்கள் உணரமாட்டார்கள் உணர வேண்டியது மக்கள் வேலை.

அரசு நடத்துகிற "சிறப்பு அங்காடி"க்கு, நியாய விலைப் பண்டகசாலை என்பது அறிவிப்பு, அரசாங்கம் நடத்துவது தான் நியாய விலைப் பண்டகசாலை என்றால் நாட்டில் உள்ள ஏனைய தனிப் பட்டோர் நடத்துகிற வர்த்தக நிலையங்கள் எல்லாம் நியாயமற்ற, விலைக் கடைகள் என்று தானே பொருள்?

அவ்வாறானல் "அநியாயத்தை" அடக்கி, 'நியாயத்தைப்' பரவச் செய்ய வேண்டிய பொறுப்பு யாருக்கு' அதுவும் அரசுக்குததானே? "அநியாயத்தை" அடக்கத்தானே, அரசுக்கு உரிமை?

தனிப் பட்டோரின் "அநியாய" விலைக் கடைகளை அவர்கள் போக்கிலேயே வளரச் செய்து விட்டு ஆரசாங்கமே கடை வைக்கப் புறப்பட்டால், இந்த அரசுக்கு, அநியாயத்தை அடக்கும் திறன் இல்லை — அல்லது "அநியாயமும்" அதற்கு உடன்பாடு தான் - என்று தானே யாரும் கருதுவார்கள் - கருத வேண்டும்? இந்த அரசுக்கு "அநியாயத்தில்" உடன்பாடு இல்லை என்றாலும் சரி, அடக்கும் திறன் உண்டு என்றாலும் சரி, இரண்டுமோ அன்றி இரண்டில் ஒன்றோ இருந்தாலே போதும், அநியாய விலைக் கடைகளை நியாய விலைக் கடைகளாக மாற்றவும், தாமே நியாய விலைக் கடைகளை திறவாதிருக்கவும்..'

நமது அரசின் செயல்களைப் பார்த்தால் எதையுமே விளங்கிக் கொள்ள முடியவில்லை. இப்படி விளங்கிக் கொள்ள முடியாத அரசுகளுக்கெல்லாம், முறையோடு இயையாத அரசுகளின் எடுத்துக் காட்டுகள் என்று தான், வரலாறு பெயரிட்டிருக்கிறது. முறையோடியைந்த அரசாக இருந்தால், அதற்கொரு "ஆரம்பம்" உண்டு - பாதை உண்டு - போய்ச் சேருகிற இலக்கும் உண்டு. எந்தச் செயல்களையும் எவரும் எளிதில் விளங்கிக் கொண்டு விடலாம். நமது அரசுக்கு "ஆரம்பமே" இல்லை' ஆதலால் அதற்கு இலக்கம் இராது. - இருந்தாலல்ல தெரிய அதனால் தான் "அநியாயத்தை" கொட்டமடிக்க விட்டுவிட்டு, "நியாயத்தை" தன் பக்கம் வைத்திருப்பதாகக் காட்டிக் கொள்கிறது. ஆனல் "அநியாயத்திற்கும்" இந்த "நியாயபாலன" அரசுக்கும் புறக் கடைத் தொடர்பு உண்டு என்ற உண்மை, அரசின் "நியாயப்" படுதாவுக்கு அடங்காமல் மக்கள் பக்கம் எட்டிப் பார்க்கிறது. "அநியாயத்தை" அதன் தானத்துக்கு ஆடவிட்டு விட்டு "நியாயத்தைப்" பாவிக்கப்புறப்பட்டிருக்கிற அரசிடம், "நியாயநிலையிலேயே" நிற்குமா- "அநியாயத்" தோடேயே ஒரு மித்து விடுமா? சுல்லோருடைய நெஞ்சகங்களுக்கும் விடை தெரியும் – வெறுமிடத்தான் தயக்கம்!ஒரு" நியாய பாலனம்"செய்யும் அரசுக்கு, "அநியாயம்" ஆயுதமாக இக்கும் போது எல்லா உண்மைகளுமே நெஞ்சை விட்டுப் பெயருமா? இப்படி ஓர் அரசை, தகுதியும், தரமுங் கொண்டே அரசு தான்என இதுவரை எந்த அரசியல் விதியும் ஒப்புக் கொண்டதில்லை.

அறப்புறம்புகள், எங்கு குறுத்து விடுகின்றனவோ. அங்கு அரசின் வாள் தோன்றித் தீர வேண்டும்! அந்த அரசுக்குப் பெயர் தான் அறங்காக்கும் அரசு!

தனிப்பட்டோர் நடத்துகின்ற கடைகள் அறம் புரியவில்லை – அறப் புட்டு செய்து மக்களை வாட்டுகின்றன என்று அரசாங்கமே அறிந்து கொண்டதன் எதிர் விளைவு தான் சிறப்பு இங்காடி அவ்வாறானல். அரசே, தனிப்பட்டோர் நடத்தும் கடைகளை 'அநியாய விலைக் கடைகள்' என்று நிச்சயித்து விட்டது என்று தான் முடிவு.

மதுரை :
25—11—66 வெள்ளி

# குறள் நெறி

வெளியூர்:
26—11—66 சனி

## கலப்பு உரம் தயாரிப்பில் மதுரை முதன்மை

### நூற்றாண்டுவிழாவில் அமைச்சர் கக்கன் உரை!

மதுரை, நவ. 23—
மதுரை நகரவையின் நூற்றாண்டு விழாவின் 3-வது நாள் நிகழ்ச்சியை காவல் துறை அமைச்சர் கக்கன் தொடங்கி வைத்தார். மாணவர் தேசீயப்படை அணி வகுப்பை ஏற்றுக் கொண்டார். பின்னர் பள்ளிக்குழந்தைகளின் விளையாட்டுக்கள் நடந்தன. நமதுபடை போர்க் காலத்தில் நடந்து கொள்ளும் சூழ்நிலைகளைத் தேசீய மாணவர்படையினர் செய்து காட்டினர். பின்பு மாறுவேடப் போட்டி நடைபெற்றது.

நகரவைத் தலைவர் திரு. கே, எசு. இராமகிருட்டிணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினர். அமைச்சர் கக்கன் பேசியதாவது:- மதுரை நகரவை 100 ஆண்டுகளுக்குமுன் தொடங்கி இன்று நூற்றாண்டு விழா கொண்டாடுகிறது இந்நகரவைதான். '-கலப்பு'' உரப் பெருக்கத்தில் முதன்மை வகிக்கிறது, சென்னை கூட கிடையாது. நகரமக்கள் உடல் நலத்தோடு வாழவும், தாய்மார்களின் குறைகளைப்போக்க அதிக அளவில் மகப்பேறு விடுதிகளைக் கட்டியும், குடிதண்ணீர் திட்டத்தையும்நிறைவேற்றி நல்ல ஏற்பாடுகள் செய்து வருகிறது. மக்கள் செலுத்திய வரியை கல்விக்காக செலவழித்து வருகிறது, இந்நகரவையின் புதிய கட்டிடம் சிறந்தமுறையில் அழகான தோற்றத்துடன் அமையவேண்டும்: நகரவைக் கட்டிடத்துடன் நகரமண்டபமும் கட்டப்பட வேண்டும். இதற்கு நிச்சயமாக அரசு உதவி செய்யும். கட்டுப்பாடு ஒழுக்கம், நேர்மை, நாட்டைக் காக்கும் பொறுப்பு ஆகிய இவற்றுடன் மக்கள் நடந்து கொள்ள வேண்டும்.

O

## பிழை திருத்தம்!

திருவில்லிபுத்தூர், நவ.23—
திருவில்லிபுத்தூர் அண்ணை மன்ற செய்தி ''குறள்நெறி'' நாளிதழில் 9—11—1966 ஆம் தேதியன்று 4-வது பக்கம் 4-வது பத்தியில் வெளியாகி இருந்தது. தி' மு. க. பிரமுகர் ஏசு டி. கொழுந்து என்பதற்குப் பதிலாக, தி. மு.க. செயலர் எசு. டி கொழுந்து என்று தவறுதலாக வெளியாகிஇருந்தது. எதிர்பாராத இத்தவறுக்கு வருந்துகிறோம்.

—*—

கி. மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழக நிலையை அறிவதற்குத் தமிழிலும ஆங்கிலத்திலும் ஆசிரியர் இலக்குவனரால் எழுதப்பட்டுள்ள தொல்காப்பிய ஆராய்ச்சியைப் படியுங்கள்.

தமிழ் விலை உரு. 4-00
ஆங்கிலம் ,, ,, 25-00

கிடைக்குமிடம் :
"குறள்நெறி"
வெளியீட்டகம்
மதுரை 5.

## பேராசிரியருக்கு மாணவர் வரவேற்பு!

———

திருவில்லிபுத்தூர், நவ, 23-
திருவில்லிபுத்தூர் கூனங்குளம் தெற்குத் தெருவில் மாணவர் அமைப்புக் கூட்டம் மாணவர் திரு. எசு. ஏ, ஆர். அங்குராசு தலைமையில் நடைபெற்றது. திருப்பரங்குன்றம் தொகுதியில் போட்டியிடும் நற்றமிழ்க் காவலனர் திரு. சி. இலக்குவனர் அவர்களை அனைத்துக் கட்சிகளும் தேர்ந்தெடுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

...0...

மாணவர் இந்த எதிர்ப்பு மாநாடு

காரைக்குடி காந்தி திடலில்

26—11—66 மாலை 3 மணிமுதல்
27—11—66 இரவு 10 மணிவரை

தலைவர்:
வை. சாத்தையன் (எம். ஏ)

திறப்பாளர்;
ஆர். என். நாவளவன் (பி. எசு. சி)

சிறப்புரையாற்றுவோர்;
அறிஞர் அண்ணு
கலைஞர் கருணாநிதி
டாக்டர். இலக்குவனர்
ம. பொ. சி
மாரிசாமி
கோ. து. நாயுடு
பெ. சீனிவாசன்
நா. காமராசன்
இராசாசி
கி. ஆ. பெ. விசுவநாதம்
அப்துல் சமது
கிருட்டிணசாமி பாரதி
செ. மாதவன்
எல். கணேசன்
கா. காளிமுத்து

நன்கொடை ரூ. 10, 5, 3, 2, 1.

## இந்தியாவுக்குச் சோவியத் உணவு உதவி

### சோவியத் தூதர் பெனதிக்தோவின் அறிக்கை

புதுதில்லி, நவ 22—
சோவியத் தூதர் ஐ. ஏ. பெனதிக்தோவ், இன்று இந்தியச் செய்தியாளருக்குச் சோவியத் உணவு உதவி குறித்து விடுத்த அறிக்கை யாவது :—

''இந்தியாவுக்குச்சோவியத் உணவு உதவி மற்றும், உழவுத் துறையில் சோவியத்-இந்தியா ஒத்துழைப்பின் வளர்ச்சி குறித்தும் சில உண்மைகளை உங்கள்கருத்துக்குள் கொண்டுவர விரும்புகிறேன்.

''இந்திய அரசின் வேண்டுகோளுக்கு இணங்க, இந்தத் தென்றல் காலத்தின்போது சோவியத் அரசு சில உணவுப் பொருட்களை இந்தியாவுக்கு அன்பளிப்பாக வழங்கத் தீர்மானித்தது; அவற்றுள் கீழ்க் கண்டவையும் அடங்கும்.

சூரிய காந்தி எண்ணெய் :
60 நூறுயிரம் கி. கி.
பால்மா ; 10 ,, ,,
பிசுக்கத்துக்கள்: 10 ,, ,,
பலதரப்பட்டகுழந்தைஉணவு
14 ,, ,,
ஊட்டச்சத்துக்கள் (வைட்டமினகள்) 8400 கி. கி.

''இந்திய சில்லரை வணிக விலைகள்ன்படி பார்த்தால். மேற்கண்ட உணவுப் பொருள்களின்விலை 8 கோடி உருபாய் ஆகிறது.

''இந்த உணவுப் பொருள்கள் இந்தியாவுக்குச் சீக்கிரம் கிடைக்க வேண்டும் என்பதற்காக, சோவியத் ஒன்றியம் அவற்றை மிகக் குறுகியகாலத்தில், 'பாபுசுகின்', 'ஏ. கைதார்' என்னும் கப்பல்களில் ஏற்றுமதி செய்தது, இவ்விரு கப்பல்களும், அண்மையில் அவை அனைத்தையும் இறக்குமதி செய்துவிட்டன.''

## கவிஞருக்கு நிதியளிப்பு

தமிழரசுக் கழக கவிஞர் தி. வெங்கடாசலம் அவர்களுக்கு நிதியளிப்பு விழாக் குழுப பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்றது தலைவராக வழக்கறிஞர், மு. மாரியப்பனும், துணைத் தலைவர்களாக பழனி. ப. மாரிமுத்துதிண்டுக்கல. நா. முத்துலக்கையன் (நகர் மன்றத் துணைத் தலைவர்) திருவாட்டி வீரலெட்சுமி உடையப்பா டாக்டர், ச. கன்னையா தே.சீ. இராசாராவ் ஆகியோரும் பொதுச் செயலாளராக மு, சந்திரபாவும் துணைச் செயலாளர்களாக. தும்பைபட்டி மு, சி. கருப்பையா பாரதி மேலச்சின்னளம்பட்டி, செல்லூர்' ம. சுந்தரம் பொருளாளர்களாக, அ. நடேசன் சே. தேவேந்திரன், சின்னளபட்டி அ. நவமணி ஆகியோரும்தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழரசுக் கழகத்தில் தொடர்ந்து பத்தொன்பது ஆண்டுகளாக தமிழக முழுவதும் தமிழரசுக் கழக இசை நிகழ்ச்சி நடத்தி வந்த கவிஞர், தி.வெங்கடாசலம் அவர்களுக்கு வாழ்க்கை நிதி அளிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

"குறள்நெறி" நாளிதழ்க்கு

ஆண்டு உறுப்பினர் கட்டணம் உரூ. 25 அனுப்புங்கள். அன்னைத் தமிழ்த் தொண்டுக்கு உதவுங்கள்.

வெளியிடுபவர் டாக்டர் சி. இலக்குவனர். பொறுப்பாசிரியர் இ. மறைமலை B. Sc. அச்சிட்டது: குறள்நெறி அச்சகம், திருப்பரங்குன்றம், மதுரை 5. தொலைபேசி 8-65.